# முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2018

M மதுரை (மா) பன்னிரெண்டாம் வகுப்பு                    பதிவு எண் : | | | | | | |

நேரம்: 3.00 மணி

## கணக்குப்பதிவியல்

மதிப்பெண்கள்: 200

### பகுதி - அ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி:**                    30 x 1 = 30

**I. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1. _______ ஐ அடிப்படையாகக் கொண்டு, இறுதிக் க/குகள் தயாரிக்கப்படுகின்றன.
2. வாராக்கடன், நிறுவனத்திற்கு ஒரு _______
3. கூடியுள்ள வட்டி, இருப்புநிலைக் குறிப்பின் _______ பக்கத்தில் தோன்றும்.
4. நிலை அறிக்கை முறை _______ முறை எனவும் அழைக்கப்படும்.
5. _______ முறையில் ஆள்சார் க/கு, ரொக்க க/கு மட்டும் பின்பற்றப்படுகிறது.
6. குத்தகைகள் மீது தேய்மானம் கணக்கிட _______ முறை பின்பற்றப்படுகிறது.
7. இயந்திரம் ஒன்றின் விற்பனை விலை ரூ.8,00,000. அதனை விற்றதில் ஏற்பட்ட இலாபம் ரூ.40,000 எனில் அதன் ஏட்டு மதிப்பு _______.
8. அனைத்து வகையுடைமை விகிதங்களும் _______ ஆல் கொடுக்கப்படும்.
9. விகிதங்கள் _______ முன்கணிப்புக்கு உதவுகிறது.
10. நடப்புக் கணக்கின் பற்றிருப்பு, இருப்புநிலைக் குறிப்பில் _______ பக்கத்தில் இடம்பெறும்.
11. பகிரப்படாத இலாபம், கூட்டாண்மை நிறுவனத்தின் இருப்புநிலைக் குறிப்பில் _______ பகுதியில் இடம்பெறும்.
12. பதிவுறா பொறுப்பை, ஏடுகளில் கொணர்வது _______ இனமாகும்.
13. விலகலின் போது, தொழிலின் மறுமதிப்பீடு இலாபம் _______ கூட்டாளிகளால் பகிரப்படும்.
14. மிகுதி விண்ணப்ப தொகையை, ஒதுக்கீட்டிற்கு சரிக்கட்டுவது _______ ஒதுக்கீடு ஆகும்.
15. காப்பு முதல் _______ போது மட்டும் வெளியிடப்படும்.

**II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

16. எடுப்பு மீது வட்டி _______ கணக்கில் பற்று வைக்கப்படுகிறது.
    a) முதல் க/கு    b) எடுப்பும் முதலும்    c) இலாப-நட்ட க/கு
17. இருப்பாய்வின்படி, கடனாளிகள் ரூ.95,000. சரிக்கட்டுதலின்படி வாராக்கடன் ரூ.5,000. ஐய கடன் ஒதுக்கு 5%, தள்ளுபடி ஒதுக்கு 2% எனில் ரூ._______ ஆகும்.
    a) 4,500    b) 1,170    c) 1,710 .
18. கடன் கொள்முதலை அறிய உதவும் கணக்கு _______
    a) மொத்த கடனீந்தோர் க/கு b) மொத்த கடனாளி க/கு    c) மொத்த சொத்து க/கு
19. 1.4.2011 கடனாளிகள் ரூ.75,000, 31.3.2012 கடனாளிகள் ரூ.90,000, பெற்ற ரொக்கம் ரூ.1,50,000 எனில் கடன் விற்பனை _______ ஆகும்.
    a) ரூ.1,25,000    b) ரூ.1,65,000    c) ரூ.1,85,000
20. வியாபாரத்தின் முதலை அறிய தயாரிக்கப்படுவது
    a) வியாபார க/கு    b) இலாப-நட்ட அறிக்கை    c) நிலை அறிக்கை
21. வெறுமையாதல் என்ற சொல் தொடர்புடையது _______
    a) புலனாகா சொத்துகள்    b) இயற்கை கனிம வளங்கள்    c) நிலைச் சொத்துக்கள்
22. கணிப்பொறி ரூ.20,000 மீது 10% குறைந்துசெல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டால், மூன்று ஆண்டுகளுக்கு நீக்கப்படும் தேய்மானத்தின் மொத்தம்
    a) ரூ.2,540    b) ரூ.5,420    c) ரூ.4,520
23. திட்டப்பட்டியல் வெளியிடுவது
    a) பணம்    b) அலகுகளின் எண்ணிக்கை    c) பணம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை
24. நிலைமுதல் முறையில், கூட்டாளிகளின் ஊதியம்
    a) முதல் க/கு    b) நடப்பு க/கு    c) எடுப்பு க/கு
25. _______ பொழுது ஆதாய விகிதம் கணக்கிடப்படும்.
    a) கூட்டாண்மை கலைப்பின் b) கூட்டாளி சேர்ப்பின்    c) கூட்டாளி விலகலின்
26. நீர்மை பொறுப்புகள் = நடப்பு பொறுப்புகள் – ___?___
    a) செலு.மாற்று சீட்டு   b) வங்கி மேல்வரைப்பற்று   c) கொடுபட வேண்டிய செலவு
27. புதிய கூட்டாளி சேர்ப்பின் போது, பகிரப்படாத இலாபம் (அ) நட்டம் மாற்றப்படுவது
    a) புதிய கூட்டாளிக்கு மட்டும்  b) பழைய கூட்டாளிகளுக்கு மட்டும்  c) அனைத்து கூட்டாளிகளுக்கும்
28. ஒரு நிறுமம், பங்கு ஒறுப்பிழப்பு செய்யும் போது, அதன் பங்கு முதல் _______
    a) கூடும்    b) குறையும்    c) அப்படியே இருக்கும்
29. அழைப்பு நிலுவை நிறுமத்தின் இருப்புநிலைக் குறிப்பில் இவ்வாறு தோன்றும்
    a) அழைக்கப்பட்ட முதலில் கழித்து காட்டப்படும்   b) வெளியீட்டு முதலில் கழித்துக் காட்டப்படும்
    c) செலுத்திய முதலுடன் கூட்டப்படும்.
30. JK வரையறு நிறுமம், பொதுமக்கள் ஒப்பிய 10 ரூபாய் 25,000 பங்குகளில் ரூ.8 வரை மட்டும் செலுத்த அழைத்திருந்தால் அழைக்கப்படாத முதல்   a) ரூ.2,50,000   b) ரூ.2,00,000   c) ரூ.50,000

## பகுதி - ஆ

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி:** 10 x 5 = 50

31. சரிக்கட்டுப் பதிவு என்றால் என்ன?
32. மாற்றுதல் முறை என்றால் என்ன?
33. மறுமதிப்பீட்டு-தேய்மான முறை - குறிப்பு எழுதுக.
34. விகிதம் - வரைவிலக்கணம் தருக.
35. ரொக்க திட்டப்பட்டியல் என்றால் என்ன?
36. உயர் இலாபம் என்பதன் பொருள் யாது?
37. அழைப்பு நிலுவை - குறிப்பு தருக.
38. இருப்பாய்வின்படி கணிப்பொறி ரூ.50,000. சரிக்கட்டு : தேய்மானம் 12% போக்கெழுதுக. சரிகட்டு & மாற்றுப் பதிவு தருக.
39. விடுபட்ட தகவலைக் காண்க.

| | ரூ. |
|---|---|
| 1.4.2010 அன்று முதல் | 50,000 |
| 31.3.2011 அன்று முதல் | 30,000 |
| அந்த ஆண்டில் நட்டம் | 12,000 |
| கூடுதல் முதல் போட்டது | 10,000 |
| எடுப்பு (x) | ? |

40. முதலாம் ஆண்டு தொடக்கத்தில் ரூ.1,20,000 க்கு ஒரு இயந்திரம் வாங்கப்பட்டது. அதன் மீது மூன்று ஆண்டுகள் 10% குறைந்துசெல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டது. மூன்றாம் ஆண்டின் முடிவில் ரூ.90,000 க்கு விற்கப்பட்டது. இயந்திரம் விற்றதில் இலாபம்/நட்டம் எவ்வளவு?
41. நீர்மை விகிதத்தைக் கணக்கிடுக.

| | |
|---|---|
| நடப்பு சொத்துகள் ரூ.20,000 | சரக்கிருப்பு ரூ.3,000 |
| நடப்பு பொறுப்புகள் ரூ.8,000 | முன்கூட்டி செலுத்திய செலவு ரூ.1,000 |

42. பின்வரும் தகவல்களிலிருந்து 2014 டிசம்பர் மாத ரொக்க திட்டப்பட்டியல் தயாரிக்க.

| | | |
|---|---|---|
| 1.12.2014 கைவச ரொக்கம் | ரூ. | 20,000 |
| அம்மாத கொள்முதல் | ரூ. | 1,40,000 |
| அம்மாத விற்பனை | ரூ. | 2,00,000 |
| அம்மாதம் வாங்க உள்ள அறைகலன் | ரூ. | 5,000 |
| அம்மாத பழைய அலுவலக பொறி விற்றது | ரூ. | 12,000 |

43. கலா, மாலா 2:1 என்ற விகிதத்தில் கூட்டாளிகளாக இயங்கி வந்தனர். கலா ஒவ்வொரு மாதம் ஆரம்பத்தில் ரூ.2,000மும், மாலா ஒவ்வொரு மாத இறுதியில் ரூ.3,000 மும் திரும்ப எடுத்தனர். அவர்களின் எடுப்பு மீது 8% வட்டி கணக்கிடுக.
44. தி/எ.ரூபன் வரையறு நிறுமம் 20,000 பத்து ரூபாய் பங்குகளை ரூ.2 தள்ளுபடியில் வெளியிட்டது. குறிப்பேடு பதிவு தருக.

## பகுதி - இ

**IV. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண் 45 கட்டாய வினா)* 5 x 12 = 60

45.a) ஒரு நிறுவனத்தின் இருப்பாய்வில் இடம் பெற்றுள்ளவை

| | *பற்று ரூ.* | *வரவு ரூ.* |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 64,000 | |
| வாராக்கடன் | 5,000 | |
| வாரா ஐயக்கடன் ஒதுக்கு | | 10,000 |

சரிக்கட்டுதல்கள்: i) வாராக்கடன் போக்கெழுதுக ரூ.4,000 ii) கடனாளி மீது 5% ஐய கடன் ஒதுக்கு பேணுக. இவை இறுதி க/குகளில் எவ்விதம் தோன்றும்? சரிகட்டு பதிவுகள் தருக. *(அல்லது)*

b) திரு.கண்ணன் ரூ2,15,000 முதலுடன் 1.4.2011 அன்று தொழில் தொடங்கினார். 31.3.2012 அன்றைய நிலை கீழே தரப்பட்டுள்ளது.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| கை ரொக்கம் | 25,000 | பற்பல கடனீந்தோர் | 20,000 |
| வங்கி ரொக்கம் | 15,000 | செலு.மாற்று சீட்டுகள் | 15,000 |
| பற்பல கடனாளிகள் | 65,000 | கொடுபட வேண்டிய செலவுகள் | 5,000 |
| சரக்கிருப்பு | 85,000 | | |
| அலுவலக சாதனங்கள் | 45,000 | | |

அவர் தனது க/குகளை ஒற்றை பதிவு முறையில் வைத்து உள்ளார். அவர் சொந்த தேவைக்கு, ஒவ்வொரு மாதமும் ரூ.2,500 எடுத்துக் கொண்டார். அந்த ஆண்டு ரூ.40,000 கூடுதல் முதல் இட்டுள்ளார். அவரது 2011-12 ஆண்டுக்கான இலாப-நட்டத்தைக் கணக்கிடுக.

46. தேய்மானம் என்றால் என்ன? அது ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
47. ரொக்கத்திட்டப்பட்டியல் என்றால் என்ன? அதனை தயாரிப்பதில் உள்ள நிலைகளை விளக்குக.
48. வணிக நற்பெயர் என்றால் என்ன? அதனை பாதிக்கும் காரணிகள் யாவை?

49. ABC & Co 1.4.2011 அன்று ரூ.2,70,000 க்கு இயந்திரம் வாங்கியது. நிறுவுகைச் செலவுகள் ரூ.30,000 செலவழித்தது. நேர்கோட்டு முறையில் 15% தேய்மானம் விலக்கப்படுகிறது. 31.3.2014 அன்று ரூ.1,80,000 க்கு விற்கப்பட்டது. மூன்று ஆண்டுகளுக்கு இயந்திர க/கு, தேய்மான க/கு தயாரிக்க.

50. கீழ்க்கண்டவைகளிலிருந்து இலாப தன்மை விகிதங்களைக் கணக்கிடுக.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| விற்பனை | 8,00,000 | மொத்த இலாபம் | 3,20,000 |
| அலுவலகச் செலவுகள் | 50,000 | விற்பனைச் செலவுகள் | 70,000 |
| நிதிச் செலவுகள் | 20,000 | இயந்திரம் விற்றதில் நட்டம் | 30,000 |
| வட்டி பெற்றது | 10,000 | நிகர இலாபம் | 1,60,000 |

51. ராமு, சோமு என்ற கூட்டாளிகள் முறையே ரூ.80,000, ரூ.60,000 முதலிட்டு 3:2 என்ற விகிதத்தில் இலாப-நட்டம் பகிர்ந்து வந்தனர்.
அவர்களது எடுப்பு தொகை ரூ.15,000; ரூ.10,000
அவர்களது ஊதியம் ரூ.8,000; ரூ.12,000
முதல் மீது வட்டி 6%, எடுப்பு மீது வட்டி 8% என ஒப்புக் கொள்ளப்பட்டது.
ராமுவிற்கு உரிய கழிவு ரூ.7,000
மேற்கண்ட சரிகட்டுகளுக்கு முன்பு நிகர இலாபம் ரூ.72,000. 2015 மார்ச் 31 தேதியில் இலாப-நட்ட பகிர்வு க/கு & கூட்டாளிகளின் முதல் க/குகள் தயாரிக்க.

52. தி/ள் குளோப் வரையறு நிறுமம் ரூ.100 முகமதிப்பு உடைய 500 பங்குகளை முதல் அழைப்பு ரூ.30 மற்றும் இறுதி அழைப்பு ரூ.20 செலுத்தப்படாததால் ஒறுப்பிழப்பு செய்தது. இவற்றுள் 300 பங்குகளை ரூ.80 வீதம் மறுவெளியீடு செய்தது.
இவை குறித்து பதிவுகள் தந்து, பங்கு ஒறுப்பிழப்பு, முதலின காப்பு க/கு தயாரிக்க.

பகுதி - ஈ

**V. எவையேனும் 3 வினாக்களுக்கு விடையளி:** *(வினா எண். 53 கட்டாய வினா)* 3 x 20 = 60

53.a) திருமதி.பத்மினி 1.4.2011 அன்று ரூ.75,000 முதல் வைத்து வியாபாரம் தொடங்கினார். அவர் உடனடியாக வாங்கிய அறைகலனின் மதிப்பு ரூ.12,000. ஆண்டிடையில் அவர் பெற்ற கடன் ரூ.15,000. அவர் குடும்ப செலவுக்காக திரும்ப எடுத்தது ரூ.21,000
கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்டு 2012 மார்ச் 31 ஆண்டுக்கான வியாபார, இலாப-நட்ட க/கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்க.

| | | |
|---|---|---|
| பற்பல கடனாளியிடமிருந்து பெற்ற ரொக்கம் | ரூ. | 1,20,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | ரூ. | 1,75,000 |
| ரொக்கக் கொள்முதல் | ரூ. | 50,000 |
| ரொக்க விற்பனை | ரூ. | 1,00,000 |
| உள் ஏற்றிச்செல் செலவு | ரூ. | 4,500 |
| அளித்த தள்ளுபடி | ரூ. | 4,000 |
| சம்பளம் | ரூ. | 5,000 |
| அலுவலகச் செலவுகள் | ரூ. | 3,000 |
| பற்பல கடனாளிகள் இறுதி இருப்பு | ரூ. | 75,000 |
| பற்பல கடனீந்தோர் இறுதி இருப்பு | ரூ. | 50,000 |
| இறுதி சரக்கிருப்பு | ரூ. | 35,000 |
| இறுதி கைவச ரொக்கம் | ரூ. | 43,900 |

அறைகலன் மீது 10% தேய்மானம் நீக்குக.

*(அல்லது)*

b) அகமது மற்றும் முகமது 7:5 என்ற விகிதத்தில் கூட்டாளிகளாக வாணிகம் செய்து வந்தனர். அவர்களின் 2013 டிசம்பர் 31ம் நாளைய இருப்புநிலைக்குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 40,000 | வங்கியிருப்பு | 52,000 |
| பொதுக்காப்பு | 72,000 | பற்பல கடனாளிகள் | 40,000 |
| தொழிலாளர் ஈட்டு தொகை ஒதுக்கு | 60,000 | சரக்கிருப்பு | 72,000 |
| முதல் க/குகள் | | இயந்திரம் | 1,60,000 |
| அகமது - 1,20,000 | | இலாப-நட்ட க/கு | 48,000 |
| முகமது - 80,000 | 2,00,000 | | |
| | 3,72,000 | | 3,72,000 |

கீழ்க்கண்ட பகிர்வுகளுக்கு உட்பட்டு 1.1.2014 அன்று முகமது கூட்டாண்மையிலிருந்து விலகினார். அவரது பங்கு முழுவதையும் அகமது வாங்கிக் கொண்டார். i) இயந்திரத்தின் மீது 10% தேய்மானம் நீக்குக. ii) கடனாளி மீது 5% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக. iii) பதிவு பெறா முதலீடுகள் ரூ.12,000 கணக்கில் பதிக. iv) தொழிலாளர் ஈட்டு தொகை ஒதுக்கு ரூ.36,000 என மதிப்பிடப்பட்டது.
மறுமதிப்பீடு க/கு, முதல் க/கு, புதிய இருப்புநிலைக்குறிப்பு தயார் செய்க.

54. திரு ஜெயராஜ் & கோவின் 31.3.2012 அன்றைய இருப்பாய்வு பின்வருமாறு:

| பற்றிருப்பு | ரூ | வரவிருப்பு | ரூ |
|---|---|---|---|
| ரொக்க இருப்பு | 18,000 | முதல் | 2,50,000 |
| வங்கி இருப்பு | 55,000 | விற்பனை | 1,60,000 |
| எடுப்புகள் | 70,000 | பற்பல கடனீந்தோர் | 40,000 |
| கொள்முதல் | 1,20,000 | 10% வங்கி கடன் (1.4.2011) | 45,000 |
| கொள்முதல் மீதான வரி | 10,000 | வெளித்திருப்பம் | 5,000 |
| விற்பனை மீதான வரி | 10,000 | | |
| சரக்கிருப்பு (1.4.11) | 60,000 | | |
| உள் திருப்பம் | 10,000 | | |
| கட்டிடம் | 75,000 | | |
| பற்பல கடனாளிகள் | 44,000 | | |
| பெறு.மாற்றுச் சீட்டு | 8,500 | | |
| வாடகை | 3,500 | | |
| கடன் மீது வட்டி | 2,500 | | |
| பொதுச்செலவு | 8,500 | | |
| அறைகலன் | 5,000 | | |
| | 5,00,000 | | 5,00,000 |

சரிகட்டுதல்கள்: i) இறுதி சரக்கிருப்பு ரூ.75,000 ii) கொடுபடாத வாடகை ரூ.1,500 iii) பொது செலவு முன்கூட்டி செலுத்தியது ரூ.1,300 iv) வங்கி கடன்மீதான வட்டி - கொடுபட வேண்டியுள்ளதற்கு வகை செய்க. v) எடுப்பு மீது 6% வட்டி விதிக்க vi) கட்டிடத்தின் மீது 10% தேய்மானம் நீக்குக.

55. கீழ்காணும் இருப்புநிலைக் குறிப்பைக் கொண்டு நடப்பு விகிதம், நீர்மை விகிதம், அக-புற பொறுப்பு விகிதம் மற்றும் உரிமையாளர் விகிதம் முதலியவற்றைக் கணக்கிடுக.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துகள் | ரூ. |
|---|---|---|---|
| பங்கு முதல் | 80,000 | ரொக்கம் | 24,000 |
| காப்பு நிதி | 40,000 | பெறுதற்குரிய மாற்று சீட்டு | 8,000 |
| கடன் | 64,000 | பற்பல கடனாளிகள் | 16,000 |
| கடனீந்தோர் | 40,000 | சரக்கிருப்பு | 32,000 |
| வங்கி மேல்வரைப்பற்று | 16,000 | நிலைச் சொத்துகள் | 1,12,000 |
| | | நற்பெயர் | 48,000 |
| | 2,40,000 | | 2,40,000 |

56. கீழ்க்கண்ட விபரங்களிலிருந்து 2014 அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான ரொக்க திட்டப் பட்டியல் தயாரிக்க.

| மாதம் | விற்பனை ரூ. | கொள்முதல் ரூ. | நிர்வாக செலவுகள் ரூ. |
|---|---|---|---|
| 2014 செப்டம்பர் | 10,00,000 | 8,00,000 | 1,10,000 |
| 2014 அக்டோபர் | 12,00,000 | 12,00,000 | 1,30,000 |
| 2014 நவம்பர் | 14,00,000 | 8,00,000 | 1,50,000 |
| 2014 டிசம்பர் | 16,00,000 | 10,00,000 | 1,40,000 |

i) அனைத்து விற்பனையும் ரொக்க விற்பனையாகும் ii) கடனீந்தோர் வழங்கிய கடனின் காலம் ஒரு மாதம் iii) செலவுகள் ஒரு மாதம் கழித்து செலுத்த வேண்டும் iv) டிசம்பரில் வாங்கப்படவுள்ள சொத்து ரூ.1,50,000 v) அக்டோபர் 1ல் ரொக்க இருப்பு ரூ.1,00,000

57. திரு சுந்தரம் ஆட்டோமொபைல் லிமிடெட் ரூ.50 முகமதிப்பு உடைய 20,000 பங்குகளை கீழ்க்காணும் வீதத்தில் செலுத்தும் வண்ணம் வெளியிட்டது.

பங்கு விண்ணப்பத்தின் போது ரூ.10
பங்கு ஒதுக்கீட்டின் போது ரூ.20
முதலாவது & இறுதி அழைப்பின் போது ரூ.20

பொதுமக்களிடமிருந்து 18,000 பங்குகள் வேண்டி விண்ணப்பங்கள் வரப்பெற்றது. அனைத்து பணமும் அழைக்கப்பட்டது. 500 பங்குகள் மீது இறுதி அழைப்பு பணம் தவிர பிற தொகை பெறப்பட்டது.

நிறுமத்தின் க/கு ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள், முக்கிய பேரேட்டு க/குகள் தயாரித்து இருப்புநிலைக் குறிப்பு காண்க.

*****